கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்கள் முன்பாக

**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# Under Section 173 BNSS

C 8165118

DEPUTY SUPDT. OF POLICE
VIGILANCE AND ANTI CORRUPTION
RAMANATHAPURAM
01/07/24

1. District : இராமநாதபுரம் PS: ஊ.த.பிரிவு Year: FIR No.: 14/2024 Date: 01.07.202
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: P.C. Amendment Act 2018 Sections பிரிவுகள்: 7(a) of P.C. Amendment Act 2018.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 28.06.2024 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : மதியம் 12 மணி Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 01.07.2024 Time : காலை 09.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) தொகுதி-I Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : நேதுவார் கிராம நிர்வாக அலுவலகம் (கிழக்கு) முதுகுளத்தூர் சுமார் 50 கி.மீ தென்மே
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கு. பாலமுருகன் (b) Father's/ Husband's Name : குருசாமி
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 68/2024 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : விவசாயம் (g) Address : 3, திருமணிபெருங்கல் (கீழ) மேலக்கொடுமலூர் (போஸ்ட்) அபிராமம் (வழி), முதுகுளத்தூர் தாலுகா இராமநாதபுரம் மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. பூமிநாதன் கிராம நிர்வாக அலுவலர் நல்லூர் குரூப் முதுகுளத்தூர் தாலுகா இராமநாதபுரம் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : N.இராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 01.07.2024ஆம் தேதி காலை 09.00 மணிக்கு அலுவலில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, மேலகன்னிச்சேரி போஸ்ட், அபிராமம் வழி, சிறுமணியேந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு. கு.பாண்டித்துரை, வயது 62/2024 த/பெ குருசாமி, என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் எதிரி திரு.பூமிசந்திரன் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று இராமநாதபுரம் ஊ.த.க.பிரிவு குற்ற எண் 14/2024 u/s 7 (a) of Prevention of Corruption Act 1988 as amended in 2018ன்படி இன்று 01.07.2024 ம் தேதி காலை 09.15 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் பின்வருமாறு அனுப்புநர் கு.பாண்டித்துரை, வயது 62/2024 த/பெ குருசாமி, 3,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G. Pandithurai
1.7.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.07.2024 - 10.50 மணி

Name: பெயர் ...............................
Rank: நிலை .....................No. எண் ..........

01.07.2024

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 14/2024 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

சிறுமணியேந்தல் கிராமம், மேலகன்னிச்சேரி போஸ்ட், அபிராமம் வழி, முதுகுளத்தூர் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, இராமநாதபுரம் மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு 2 ஆண் ஒரு பெண் பிள்ளைகள் உள்ளார்கள். எனது மகள் இரத்தினப்பிரியாவை கமுதியைச்சேர்ந்த பாலமுருகன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்ததில் அவர் உடல்நலம் சரியில்லாமல் கடந்த 19.02.2019 ஆம் தேதி இறந்து விட்டார். நான் சுமார் 15 நாட்களுக்கு முன்பு நடந்த ஜமாபந்தியில் ஆதரவற்ற விதவைப்பெண்கள் உதவித்தொகை பெறுவதற்காக எனது மகளின் பெயரிலுள்ள விண்ணப்பத்தை ஆர்டிஓ விடம் நேரில் கொடுத்தேன். மேலும் அதை கடந்த 20.06.2024ஆம் தேதி ஆன்லைனிலும் பதிவு செய்தேன். அதனைத்தொடர்ந்து நான் கடந்த 28.06.2024 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் என் மகளுக்கு விதவை உதவித்தொகை பெறுவது சம்மந்தமாக நல்லூர் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு.பூமிசந்திரன் என்பவரை நேரில் சந்தித்து விபரம் கேட்ட போது நான் கொடுத்த மனுவை முதுகுளத்தூர் தாசில்தார் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்து விட்டதாகவும் ஆனால் அதை முழுமையாக பெற்றுத் தர தனக்கும் தாசில்தார் அலுவலகத்தில் உள்ள பிற அதிகாரிகளுக்கும் சேர்த்து ரூ.6,000/– கொடுக்க வேண்டுமென கூறினார். அதற்கு நான், என்னிடம் அவ்வளவு ரூபாய் இல்லை என்று கூறியதற்கு, சரி ரூ.5,000/–மாவது கொடுங்க நீங்க கொடுக்குற ரூ.5,000/– த்தில் மேல உள்ளவங்களுக்கு ரூ.4,000/– ம் போயிரும் எனக்கு வெறும் ரூ.1000/– மட்டும் தான் கிடைக்கும் எனவும் நீங்க வரும் திங்கட்கிழமை என்னை வந்து பணத்தோட பாருங்க எனச் சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரி பார்க்கலாம் என்று சொல்லி விட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். வீட்டில் இருந்து யோசித்து பார்க்கும் போது அரசு பணியை செய்வதற்காக லஞ்சமாக பணம் கேட்ட நல்லூர் குரூப் விஏஓ திரு.பூமிசந்திரன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடிவு செய்தேன். எனது

மகளுக்கு ஆதரவற்ற விதவை தொகை பெற விண்ணப்பித்த விண்ணப்பத்தை மேலதிகாரிக்கு பரிந்துரை செய்வதற்கு லஞ்சமாக ரூபாய் 5,000/- கொடுக்க விருப்பம் இல்லாததால், என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட வி.ஏ.ஓ. திரு.பூமிசந்திரன் என்பவர் மீது நடவடிக்கை எடுத்து எனது மகளுக்கு ஆதரவற்ற விதவை பெண்கள் உதவித்தொகை கிடைப்பதற்கு ஆவண செய்யுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் (G.Pandithurai) 01.07.2024 அய்யா, மேற்படி புகாரை இன்று 01.07.2024ம் தேதி 09.00 மணிக்கு என்னால் பெறப்பட்டு வாதி மற்றும் எதிரியின் முன்னடத்தை பற்றி இரகசிய விசாரணை மேற்கொண்டு இன்று 01.07.2024ம் தேதி 09.15 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 14/2024 பிரிவு 7 (a) of P.C. Act, 1988 as amended in 2018ன்படி வழக்கு பதிவு செய்தேன். ஒப்பம் (N.Rajeswari), 01.07.2024, Inspr., V&AC, Rmd. முதல் தகவல் அறிக்கை அசலை வாதியின் புகாருடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

1-7-24

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.